**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2022 |
| Name | : Kousalyadevi |
| P.W. | : 2 |
| Spouse Name | : Kannan |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2024

**எதிரிகள் 1 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ருத்திரபாளையத்தில் வசித்து வருகிறார். இந்த வழக்குச் சம்பவ சமயத்தில் நாங்கள் கார்வேம்பு மட்டை மில்லில் வேலை செய்து அங்கு தங்கி இருந்தோம். எனது கணவர் மட்டை மில்லில் டிராக்டர் டிரைவராகவும், எனது அம்மா, அப்பா அங்கேயே தங்கி வேலை செய்து வந்தோம். சுமார் 2 1/2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 10.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் 7 பேரும் வந்து மட்டை மில்லில் நாங்கள் தங்கியிருந்து வீட்டின் பின் பக்க கதவை வந்து தட்டினார்கள். எனது அண்ணன் சத்தம் ஏதோ கேட்கிறது என்று போனார். ஏதோ தகராறு நடப்பது போல் தெரிந்ததால் நானும் என்ன என்று போய் பார்த்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் அண்ணனுடன் பேசிக்கொண்டு கூட்டத்தில் 7 பேரில் ஒருவர் தாயோழி மகனே என்று சொல்லி எனது அண்ணனை திட்டினார். எனது அம்மா, அப்பா சத்தம் கேட்டு வந்து என் அப்பா மட்டை மில் ஓனருக்கு போன் செய்த பிறகு தங்கராஜும், ஞானவேல் சாரும் வந்தார்கள். ஏன் சத்தம் போடுகிறீர்கள்

என்று கேட்டுக்கொண்டு ஏதாவது இருந்தாலும் பகலில் பேச வேண்டியது தானே நைட்டில் என்ன பேச்சு என்று சொன்னதற்கு ஓனரை பிடித்து 7 பேரும் அடித்துவிட்டார்கள். அப்போது எனது அண்ணன் ஓனரை அடிக்கும் போது தடுத்த போது எனது அண்ணனையும் அடித்துவிட்டார்கள். தமிழ்செல்வன் என்பவர் மண்வெட்டியால் எனது அண்ணனின் தலையிலும், கண்ணிலும் வெட்டிவிட்டார்கள் மீண்டும் அரிவாளை எடுத்து என் அண்ணனை வெட்ட போன போது நான் தடுத்த போது எனது இடது கையிலும் அரிவாள் வெட்டு பட்டுவிட்டது. ஞானவேல் செல்வம் என்பவரின் நெஞ்சில் கல்லை எடுத்து போட்டார்கள். அவர் மூச்சு விட முடியாமல் போய் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். எனக்கு கையில் ரத்தம் நிற்காமல் வந்தது. எனது அண்ணனுக்கு தலையில் ரத்தம் நிற்காமல் வந்து கொண்டிருந்தது. என் அண்ணனையும், என்னையும் தாக்க பயன்படுத்திய மண் வெட்டியையும், அரிவாளையும் அங்கேயே போட்டுவிட்டு போய் விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் மண் வெட்டி, அரிவாள், கற்களால் தான் சம்பவத்தன்று ஆஜர் எதிரிகள் தாக்கினார்கள். **அந்த மண் வெட்டி அரசுத் தரப்பு சான்று பொருள் 1, அரிவாள் அரசுத் தரப்பு சான்று பொருள் 2, கருங்கற்கள் 3 எண்ணிக்கைகள் அரசுத் தரப்பு சான்று பொருள் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஓனர் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து உடுமலை அரசு மருத்துவமனைக்கு என்னையும், என் அண்ணனையும் சிகிச்சைக்கு சேர்த்தார். நாங்கள் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவம் நடந்த நேரம் இரவு 11.00 மணி இருட்டான நேரம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் மட்டை மில் சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். இரவு நேரத்தில் காம்பவுண்ட் கேட் உள் பக்கமாக பூட்டப்பட்டிருக்கும் என்றால் சரிதான். கம்பெனிக்கு பின்புறமாக இட்டேரி உள்ளது என்றால் சரிதான். மேற்டி இட்டேரி மட்டை மில்லில் இருந்து 200 அடி துரம் இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் வழக்கமாக 8.30 மணிக்கு துங்கச் செல்வோம். மேற்படி 200 அடி துரத்தில் உள்ள இட்டேரியில் சத்தம் போட்டால் மட்டை மில்லிற்கு சத்தம் கேட்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். எனது அண்ணனுக்கும், ஆஜர் எதிரியான தமிழ்ச்செல்வனுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். இந்த வழக்குச் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மட்டை மில் காம்பவுண்ட் கேட் பூட்டப்பட்டிருந்ததால் நான் சொன்னபடி சம்பவம் நடக்கவில்லை என்றால் சரிதான். மெயின் கேட் வழியாக வந்தால்

தான் நான் சொன்னபடி சம்பவம் நடைபெற வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மட்டை மில் ஓனர் எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் மட்டை மில்லிலேயே 300 மீட்டர் தள்ளி வசித்து வருகிறார்கள். காம்பவுண்ட் சுவர் ஓனர் வீட்டை சுற்றி உள்ளது என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவர் சுற்றளவு 450 அடி வரை இருக்கும் என்றால் சரிதான்.

(2) நாங்கள் வசிக்கும் இடத்தில் இருந்து 300 மீட்டர் தள்ளி ஓனர் வசிப்பதால் அவருக்கு இட்டேரியில் நடந்த பிரச்சனை சம்மந்தமாக தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். மட்டை மில் ஒனருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் முன் விரோதம் உள்ளதா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மட்டை மில் ஓனருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்த விவரம் எனது அண்ணனுக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்குதெரியாது. மட்டை மில் ஓனரின் துண்டுதலின் பேரில் எனது அண்ணன் ஆஜர் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அண்ணன் கொடுத்த புகாரின் மீது என் அண்ணன் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மட்டை மில் ஓனர் துண்டுதலின் பேரில் தான் என் அண்ணன் ஆஜர் எதிரிகளுக்கு எதிராக இந்த பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்குச் சம்பவத்தை நான்நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சத்தம் கேட்டு நான் போகும் போது கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்றால் சரிதான். என்னை போலீசார் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தை போலீசாருக்கு யார் ? அடையாளம் காட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கின் சான்று பொருட்களை போலீசார் எங்கு வைத்து கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.11.28 17:12:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2022 |
| Name | : Iyappan |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2024

**எதிரிகள் 1 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ருத்திரபாளையத்தில் வசித்து வருகிறேன். கார் வேம்பு மட்டை மில்லில் டிராக்டர் வண்டி ஓட்டி வருகிறேன். அ.சா.2 எனது மகள் ஆவார். நான், எனது மகன், மகள் ஆகிய எல்ரோரும் மட்டை மில்லில் தங்கி வேலை செய்து வந்தோம். அங்கு எனது மருமகன் டிராக்டர் டிரைவராக வேலை செய்து வந்தார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வடபுறம் இட்டேரியில் சத்தம் கேட்டது. நான் போய் பார்த்த போது ஆஜர் எதிரிகள் 7 பேரும் எனது மகன் ஜெகதீஷ் குமாருடன் பேசிக்கொண்டு இருந்தார்கள். ஓனர் வந்து பேசக் கூடாது என்று சொன்னார். நான் கை ஒடிந்ததால் வெளியே போகவில்லை. நான் வீட்டிற்குள்ளேயே இருந்தேன். அப்போது கையில் அடிப்பட்டு எனது மகள் வீட்டிற்குள் வந்த போது அடிப்பட்டது தெரிந்தது. வெளியே எனது மகனுக்கு தலையில் அடிப்பட்டது எனது மனைவி வந்து சொல்லி தெரியும். இது சம்மந்தமாக

போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்காததால் பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**கேள்வி – ஆ**ஜர் எதிரிகளை எனக்கு சம்பவத்திற்கு முன்பே தெரியுமா என்றால் ?

பதில் – ருத்திரபாளையத்தில் இருந்த போது 15 வருடங்களுக்கு முன்பே தெரியும்

கேள்வி – எனது மகனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எப்படி பழக்கம் என்றால் ?

பதில் – எனக்கு தெரியாது

கேள்வி – போலீஸ் விசாரணையில் கடந்த 13.12.2021 ம் தேதி இரவு 10.00 மணிக்கு எங்கள் வீட்டின் மில்லிற்கு பின்புறம் சத்தம் கேட்டதால் என் மகன் கதவை திறந்து கொண்டு வெளியே சென்றார் என்றும் சிறிது நேரத்தில் எங்கள் வீட்டிற்கு வெளியே ஏதோ தகராறு நடப்பது போல் சத்தம் கேட்டு நானும், எனது மகளும் பின்னால் சென்று நானும், என் மனைவி, என் மருமகன் ஆகியோர் வந்து பார்த்த போது எனக்கு தெரிந்த தமிழ்ச்செல்வன், கார்த்தி மற்றும்அவருடன் 5 பேர் இருந்தார்கள் என்றும், தமிழ்செல்வன் என் மகனை பிடித்து இழுத்து கீழே தள்ளி மற்றவர்கள் என் மகனை கையாலும், காலாலும் எட்டி உதைத்து தாக்கிக் கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது கார்த்தி என்பவர் அங்கு கிடந்த மண் வெட்டியை எடுத்து எனது மகனை மற்றவர்கள் பிடித்துக்கொள்ள தலையின் பின் புறத்தில் மண் வெட்டியால் மாறி, மாறி வெட்டினார்கள் என்றும், என் மகன் தலை திரும்பியதால் என் மகனின் இடது கண் பக்கத்தில் மண் வெட்டியால் வெட்டினார் அதைப் பார்த்து என் மகள் ஓடிவந்து தமிழ்ச்செல்வனை குறுக்காட்டிய போது தமிழ்ச்செல்வன் என் மகளின் கையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டு கீழே கிடந்த அரிவாளை எடுத்து என் மகளை வெட்டினார் என்றும், அதில் என் மகளின் இடது கையில் காயம் ஏற்பட்டது என்றும், என் மகனையும், மகளையும் தமிழ்ச்செல்வன், கார்த்தி மற்றும் உடன் வந்தவர்கள் சேர்ந்து அடிப்பதை பார்த்து நான், என் மருமகன், மனைவி ஆகியோர் தடுத்ததாகவும் எங்களை மிரட்டிவிட்டு எதிரிகள் காலால் எட்டி உதைத்தார்கள் எங்கள் ஓனர்கள் தங்கராஜ் மற்றும் ராசு (எ) ஞான செல்வம் ஆகியோர் வந்த போது அவர்களையும் சேர்த்து எதிரிகள் கீழே கிடந்த கற்களை எடுத்து நெஞ்சில் காயம் ஏற்படுத்தினார்கள்

என்றும், அங்கு நிறுத்தியிருந்த எங்கள் ஓனரின் பைக்கை கார்த்தி கையில் வைத்திருந்த மண் வெட்டியால் அடித்து நொறுக்கினார்கள் என்றும், மேலும் கொல்லாமல் விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், எனது மகன் மற்றும் மகளுக்கு ரத்தம் வருவதை பார்த்து அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்ததாக எனது விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில் – சரியல்ல. நான் மருத்துவமனைக்கே போகவில்லை எனது மகளும், மகனும் சொல்லியிருப்பார்கள்.

கேள்வி – எதிரிகள் ஏற்கனவே எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில் – சரியல்ல

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.11.28 17:12:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்